# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 115/மா/2025**
**நாள்: 13.11.2025**

| | | |
|---|---|---|
| கா. பாரதிகண்ணன்<br>தூத்துக்குடி | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>தூத்துக்குடி மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

தூத்துக்குடி, போல்பேட்டை மேற்கு, கதவு எண்.153A என்கிற முகவரியில் வசிக்கும் டாக்டர் கா. பாரதிகண்ணன் என்பவரின் 04.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.01.2025 அன்று பெறப்பட்டு, 115/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

தூத்துக்குடி, போல்பேட்டை மேற்கு, கதவு எண்.153A என்கிற முகவரியில் வசிக்கும் டாக்டர் கா. பாரதிகண்ணன் என்பவர் தனது 04.01.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் தூத்துக்குடி மாநகராட்சி பகுதி போல்பேட்டை மேற்கு, கதவு எண் 153A-ல் வசித்து வருகின்றேன். நானும் எனது குடும்ப உறுப்பினர், எனது தகப்பனார், தாயார், இளைய சகோதரர் ஆகியோர் சேர்ந்து தூத்துக்குடி நகர் பகுதி VVD சாலையில் ஒரு வணிக அலுவலகம் (Business Office) கட்டுமானம் செய்ய முடிவு செய்தோம்.

அதற்கான ஆவணங்களுடன் Online-ல் விண்ணப்பம் செய்தோம். முதன்மை ஒப்புதலுக்காக தூத்துக்குடி உள்ளூர் திட்டக் குழுமத்தில் திட்ட அனுமதி ஒப்புதல் பெற்று உரிய கட்டணங்கள் செலுத்தி விட்டோம். Online விண்ணப்பம் என்பதால் தூத்துக்குடி மாநகராட்சியின் கட்டிட ஒப்புதலுக்கு (Business Licence) Online Application No.138/CP24-25/0008071/21.05.2024-ல் ரூ.500/– செலுத்தி விண்ணப்பம் செய்தோம். 30.07.2024 தேதியிட்ட Demand Letter மூலம் ரூ.9,40,081/– செலுத்த தெரிவிக்கப்பட்டது. மேற்படி தொகை கைவசம் இல்லாததால் செலுத்தவில்லை. அதன் பின்னர் தொகையை நேர்பாடு செய்து செலுத்த முற்படுகையில் Website closed என வந்தது. எனவே offline மூலமாக பணம் பெற்றுக் கொண்டு கட்டிட அனுமதி வழங்கிட மனு செய்தோம். ஆனால் இதுவரை பதில் இல்லை. நேரில் சென்று முறையிட்டதில் 01.08.2024 முதல் கட்டண விகிதங்கள் மாறுபட்டுள்ளது. புதிதாக Online–ல் விண்ணப்பித்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள தெரிவித்தார்கள். எவ்வளவு பணம் செலுத்த வேண்டும் என வினவியதற்கு

ரூ.32,39,910/– செலுத்த வேண்டும் என தெரிவித்தார்கள். பதறி போன நான் செய்வதறியாது இருக்கிறேன்.

எனவே சமூகம் தயவு கூர்ந்து ஆணையரால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தொகைக்கு வட்டி அடிப்படையிலோ அல்லது அபராத அடிப்படையிலோ கட்டணம் பெற்றுக் கொண்டு கட்டிட அனுமதி (Buildng Licence) வழங்க நீதி வழங்கிட பணிந்து கேட்டுக் கொள்கிறோம்.'' என தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட மனுதாரர் தனது 25.08.2025 நாளிட்ட மற்றொரு மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

''தூத்துக்குடி மாநகராட்சியில் அண்ணா நகரில் அமைந்துள்ள எனது இடமான சர்வே எண் 3534/1A, 40/1A1B பிளாக் 23A, 16, வார்டு பெயர் 4C கட்டிடம் கட்டுவதற்காக நகரம் மற்றும் கிராம திட்டமிடல் துறையில் பதிவு செய்து அதற்கான கட்டணத்தை (ரூ.1091945) 24.01.2024 மற்றும் (ரூ.575403) 27.02.2024 ஆகிய தேதிகளில் மொத்த தொகையான ரூ.1667348 கட்டி நகரம் மற்றும் கிராம திட்டமிடல் துறையில் அனுமதி பெற்று விட்டேன்.

அதன் பிறகு தூத்துக்குடி மாநகராட்சியில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரியிருந்தேன். அதற்கு அவர்கள் (தூத்துக்குடி மாநகராட்சி) 21.05.2024 தேதியில் அன்று கட்டிடம் கட்டுவதற்கான கோரிக்கைக்கான தொகையை ரூ.9,40,081 கோரிக்கை வைத்தனர். அந்த சமயத்தில் அந்த தொகையை என்னால் கட்ட இயலவில்லை. ஆகையால் மீண்டும் நான் அந்த தொகையை கட்டுவதற்கு கோரினேன். ஆனால் அவர்கள் புதியதாக அதிகப்படியான ஒரு தொகையை கட்டுமாறு கோரிக்கை அறிக்கையை அளித்தனர். ஆகையால் நான் உங்களிடம் முறையீட்டிற்காக வந்துள்ளேன்.

ஆகையால் அவர்கள் (தூத்துக்குடி மாநகராட்சி) 21.05.2024 தேதியன்று கோரிய பழைய தொகையையும் (ரூ.9,40,081) மற்றும் இன்று வரை உள்ள அந்த தொகைக்கான வட்டியையும் சேர்த்து கட்டுவதற்கு அனுமதி அளித்து கட்டிடம் கட்டுவதற்கு வழிவகை செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 16.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தன்னுடைய 30.05.2025 நாளிட்ட கடிதம் எண்.எப்1/1333/2025 (மே.ம)–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

''புகார் மனுதாரர் கட்டிட அனுமதி கோரிய இணையதளம் சேவை எண்.138/CP/24-25/0008071-ல் விண்ணப்பம் செய்ததின் பேரில் 28.05.2024 இளநிலை உதவியாளர் தனது Login Id-ல் உரிய கட்டணங்கள் பதிவு செய்து மேல் நடவடிக்கைக்கு உதவிப்பொறியாளருக்கு அனுப்பப்பட்டு உதவிப்பொறியாளர் / உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் (திட்டம்) ஆய்வு செய்து ஆணையர் அனுமதிக்கு அனுப்பப்பட்டு 26.06.2024 அன்று ஆணையாளர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மீண்டும் இளநிலை உதவியாளர் 01.07.2024 அன்று மனுதாரர் உரிய கட்டணங்கள் செலுத்துவதற்கு ஏதுவாக மனுதாரர் தனது சேவை எண்ணில் பதிவு இறக்கம் செய்யும் வகையில் Print செய்துள்ளார்.

மேற்படி கட்டண விகிதம் 01.07.2024 அன்று மனுதாரர் கட்டிட அனுமதிக்கு பதிவேற்றம் செய்யப்பட்ட சேவை இணைப்பில் அன்றைய தினமே பார்வையிட்டு அன்றைய நாளிலிருந்து 30 நாட்களுக்குள் உரிய கட்டணங்கள் செலுத்தலாம். கட்டணங்கள் செலுத்த தெரிவித்த 30 நாட்களுக்குள் கட்டணங்கள் செலுத்தாவிடில் மேற்படி சேவை முடிவு பெற்று விடும் வகையில் இணையதளம் சேவை செயல்பாட்டில் உள்ளது.

இணையதளம் வாயிலாக கட்டிட அனுமதி வழங்கும் நடைமுறை உள்ளதால் உரிய கட்டணங்கள் செலுத்த மாநகராட்சியால் அறிவிப்பு வழங்க வேண்டியதில்லை. மனுதாரர் பதிவேற்றம் செய்யப்பட்ட Login Id-ல் பார்வையிட்டு மனுதாரர் செலுத்தப்பட வேண்டும். மனுதாரர் கூறுவது 30.07.2024 நாளிட்ட கேட்பு அறிவிப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை. 30.07.2024–க்குள் சேவை முடிவு பெற்றுவிடும் என தெரிவித்து உடனடியாக உரிய கட்டணம் செலுத்த மனுதாரருக்கு நேரில் அறிவுறுத்தப்பட்டது. ஆனால் உரிய காலத்திற்குள் கட்டணங்கள் செலுத்தப்படவில்லை.

மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் கட்டிட அனுமதிக்கு Offline-ல் பணம் செலுத்த அனுமதி கோரி விண்ணப்பம் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் கட்டிட அனுமதி வழங்கும் நடைமுறை இணையதளம் வாயிலாக வழங்கப்பட்டு வரும் நிலையில் Offline-ல் பணம் செலுத்த வழிவகை இல்லை. மேலும் கட்டண விகிதங்கள் தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றம் தீர்மான எண்.496 நாள் 31.07.2024–ல் மாற்றியமைக்கப்பட்டது. மேலும் தற்போது ஒருங்கிணைந்த கட்டிட அனுமதி கட்டணம் அரசாணை எண்.72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 05.02.2025–ன்படி மாற்றியமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. மேலும் மாமன்ற தீர்மான எண்.595 நாள் 27.02.2025–ன்படி இதர கட்டணங்களும் செலுத்தப்படவேண்டும். எனவே பழைய கட்டணம் வசூலிக்க இயலாது. மேலும் தாமதமாகும் கட்டணங்கள் செலுத்துவதற்கு வட்டி அல்லது அபராதம் வசூலிக்க இயலாது.

மனுதாரர் இன்றைய தினம் மனுதாரர் கட்டிட அனுமதி பெறும்போது தற்போதைய கட்டணங்கள் செலுத்தப்படவேண்டும். மேலும் தற்போதைய நடைமுறைப்படி இணையதளம் வாயிலாக தான் கட்டிட அனுமதி பெற இயலும். எனவே Offline-ல் கட்டிட அனுமதி கட்டணங்கள் பெற இயலாது.

எனவே மனுதாரர் ஒற்றை சாளர இணையம் (Single window portal) மூலம் விண்ணப்பித்து உள்ளூர் திட்டக்குழுமத்தில் திட்ட அனுமதி பெறப்படும் மனு நேரடியாக நகராட்சி நிர்வாக இயக்குநரகம் இணைய தளம் சேவை tn.urban.eseva மூலம் பெறப்பட்டு இணையதளம் வாயிலாக தான் கட்டிட அனுமதி வழங்க இயலும். எனவே மனுதாரர் மீண்டும் இணையதளம் வாயிலாக தான் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் பழைய கட்டணத்தில் நேரடியாக (Offline) கட்டிட அனுமதி வழங்க இயலாது என்ற விவரம் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 26.08.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.08.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் Dr. கா. பாரதிகண்ணன் சார்பாக அவரது தந்தை திரு. P. காசிராஜன் என்பவர் 26.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"நானும் எனது குடும்ப உறுப்பினருடன் சேர்ந்து தூத்துக்குடி நகர் பகுதி VVD சாலையில் ஒரு வணிக அலுவலகம் (Business Offce) கட்டுமானம் செய்ய முடிவு செய்து ஆவணங்களுடன் Online விண்ணப்பம் செய்து முதன்மை ஒப்புதலுக்காக தூத்துக்குடி உள்ளூர் திட்டக் குழுமத்தில் திட்ட அனுமதி ஒப்புதல் பெற்று கொண்டு உரிய கட்டணங்கள் செலுத்திய பின் Online விண்ணப்பம் தூத்துக்குடி மாநகராட்சி கட்டிட ஒப்புதலுக்கு (Business Licence) Online Application No.138/CP24-25/0008071/21.05.2024-ல் ரூ.500/– செலுத்தி விண்ணப்பித்ததில் 30.07.2024 நாளிட்ட Demand Letter மூலம் ரூ.9,40,081/– செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. மேற்படி தொகை கைவசம் இல்லாததால் செலுத்த இயலவில்லை. பின்னர் தொகையை ஏற்பாடு செய்து செலுத்த முற்படுகையில் Website மூலம் பணம் செலுத்த இயலவில்லை இது குறித்து

தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு 25.07.2024 அன்று கீழ்க்கண்டவாறு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டது.

'This is to bring to your notice that I Dr. Bharathi Kannan applied for business office building approval through online mode and it has been approved on 26.06.2024.My online application No. is 8071. Despite after approval, my demand print out is not visible on the website preventing my online payment. Web operator has been reverted to commissioner for re-approval.

Kindly approve the same and do the needful sir'

.எனவே, Offline மூலமாக பணம் பெற்றுக்கொண்டு கட்டிட அனுமதி வழங்கிட மனு அளித்தோம். ஆனால், இதுவரை பதிலளிக்கவில்லை. எனவே, நேரில் சென்று முறையிட்டதில் 01.08.2024 முதல் கட்டண விகிதம் மாற்றப்பட்டுள்ளது என தெரிவித்தார்கள். புதிதாக Online-ல் விண்ணப்பித்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள தெரிவித்திருந்தார்கள். எவ்வளவு பணம் கட்டணம் செலுத்த வேண்டும் என கேட்டதற்கு ரூ.32,39,910/– என கட்டணம் செலுத்த வேண்டும் என தெரிவித்தார்கள். அதற்கு நான் ஒப்புக் கொள்ளவில்லை. மேலும் ஏற்கனவே மாநகராட்சியால் தெரிவித்த ரூ.9,40,081/–ஐ உடன் இன்றைய தேதியில் வட்டியுடன் செலுத்த சம்மதம் தெரிவிக்கிறேன். அதற்கான கடிதத்தை இம்முறை மன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கிறேன்.

எனவே கட்டிட அனுமதி (Building Licence) வழங்கிட தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவு விடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.''

6. தூத்துக்குடி மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் 26.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''புகார் மனுதாரர் கட்டிட அனுமதி கோரிய இணையதளம் சேவை எண்.138/CP/2024-2025/0008071-ல் விண்ணப்பம் செய்ததின் பேரில் 28.05.2024 இளநிலை உதவியாளர் தனது Login Id-ல் உரிய கட்டணங்கள் பதிவு செய்து மேல் நடவடிக்கை எடுக்க உரிய அதிகாரிகளுடன் ஆய்வு செய்து ஆணையர் அனுமதிக்கு 26.06.2024 அனுப்பப்பட்டு அன்றைய ஆணையாளர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டது. மீண்டும் இளநிலை உதவியாளர் 01.07.2024 அன்று மனுதாரர் உரிய கட்டணங்கள் செலுத்துவதற்கு ஏதுவாக தனது சேவை எண்ணில் பதிவு இறக்கம் செய்யும் வகையில் Print செய்துள்ளார்.

01.07.2024 அன்று மனுதாரர் கட்டிட அனுமதிக்கு பதிவேற்றம் செய்யப்பட்ட சேவை இணைப்பில் அன்றைய தினமே பார்வையிடப்பட்டு அன்றைய நாளிலிருந்து 30 நாட்களுக்குள் உரிய கட்டணங்கள் செலுத்தலாம் எனவும், 30 நாட்களுக்குள் கட்டணங்கள் செலுத்தாவிடில் மேற்படி சேவை முடிவு பெற்று விடும் வகையில் இணையதளம் சேவை செயல்பாட்டில் இருந்தது.

இணையதளம் வாயிலாக கட்டிட அனுமதி வழங்க நடைமுறை உள்ளதால் உரிய கட்டணங்களை செலுத்த மாநகராட்சியால் அறிப்பு வழங்க வேண்டியதில்லை. மேலும் மனுதாரர் கூறுவது 30.07.2024 நாளிட்ட கேட்பு அறிவிப்பு எதுவும் வழங்கப்படவில்லை. 30.07.2024–க்குள் சேவை முடிவு பெற்று விடும் என தெரிவித்து உடனடியாக உரிய கட்டணம் செலுத்துமாறு மனுதாரருக்கு நேரில் அறிவுறுத்தப்பட்டது. ஆனால் மனுதாரர் உரிய காலத்திற்குள் கட்டணங்கள் செலுத்தப்படவில்லை.

மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் கட்டிட அனுமதிக்கு Offline-ல் பணம் செலுத்த அனுமதி கோரிய விண்ணப்பம் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் கட்டிட அனுமதி வழங்கும் நடைமுறை இணையதளம் வாயிலாக வழங்கப்பட்டு வரும் நிலையில் Offline-ல் பணம் செலுத்த வழிவகை இல்லை. மேலும் கட்டண விகிதங்கள் தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றம் தீர்மான எண்.496 நாள் 31.07.2024–ல் மாற்றியமைக்கப்பட்டது. மேலும் தற்போது ஒருங்கிணைந்த கட்டிட அனுமதி கட்டணம் அரசாணை எண்.72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 05.02.2025–ன்படி மாற்றியமைக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. மேலும் மாமன்ற தீர்மான எண்.595 நாள் 27.02.2025–ன்படி இதர கட்டணங்களும் செலுத்தப்படவேண்டும். எனவே பழைய கட்டணம் வசூலிக்க இயலாது. மேலும் தாமதமாகும் கட்டணங்கள் செலுத்துவதற்கு வட்டி அல்லது அபராத தொகை வசூலிக்க இயலாது.

எனவே மனுதாரர் ஒற்றை சாளர இணையம் (Single window portal) மூலம் விண்ணப்பித்து உள்ளூர் திட்டக்குழுமத்தில் திட்ட அனுமதி பெறப்படும் மனு நேரடியாக நகராட்சி நிர்வாக இயக்குநரகம் இணைய தளம் சேவை tn.urban.eseva மூலம் பெறப்பட்டு இணையதளம் வாயிலாக தான் கட்டிட அனுமதி வழங்க இயலும். எனவே மனுதாரர் மீண்டும் இணையதளம் வாயிலாக தான் விண்ணப்பிக்க வேண்டும் எனவும், பழைய கட்டணத்தில் நேரடியாக Offline கட்டிட அனுமதி வழங்க வழி வகையில்லை என்கிற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. மனுதாரரின் மனு, மனுதாரர் சார்பாக ஆஜரான அவரது தந்தை திரு. P. காசிராஜன் என்பவரின் வாக்குமூலம் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

“தூத்துக்குடி மாநகராட்சி VVD சாலையில் அண்ணா நகரில் அமைந்துள்ள சர்வே எண் 3534/1A, 40/1A1B பிளாக் 23A. 16 வார்டு பெயர் 4C–ல் ஒரு வணிக அலுவலகம் (Business Office) கட்டுமானம் கட்டுவதற்கு ஆவணங்களுடன் முதன்மை ஒப்புதலுக்காக தூத்துக்குடி உள்ளூர் திட்டக் குழுமத்தில் திட்ட அனுமதி ஒப்புதல் பெற்று கொண்டு, தூத்துக்குடி மாநகராட்சியின் Website மூலம் 21.05.2024 அன்று கட்டிட அனுமதிக்கு (Business Licence) Online-ல் Application No.138/ CP24-25/0008071/21.05.2024-ல் ரூ.500/– செலுத்தி விண்ணப்பித்ததில், 30.07.2024 நாளிட்ட Demand letter மூலம் ரூ.9,40,081/– செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது என்பதும், மேற்படி தொகை கைவசம் இல்லாததால் மனுதாரரால் செலுத்த இயலவில்லை என்பதும், பின்னர் தொகையை ஏற்பாடு செய்து Website மூலம் செலுத்த முற்படுகையில் பணம் செலுத்த இயலவில்லை என்பதும், இது குறித்து தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு 25.07.2024 அன்று

“This is to bring to your notice that I Dr. Bharathi Kannan applied for business office building approval through online mode and it has been approved on 26.06.2024.My online application No. is 8071. Despite after approval, my demand print out is not visible on the website preventing my online payment. Web operator has been reverted to commissioner for re-approval.

Kindly approve the same and do the needful sir" என்ற குறுஞ்செய்தி அனுப்பப்பட்டது என்பதும், மேலும், Offline மூலமாக பணம் பெற்றுக்கொண்டு கட்டிட அனுமதி வழங்கிட மனு அளித்தற்கு, பதில் ஏதும் பெறப்படவில்லை என்பதும், நேரில் சென்று முறையிட்டதில் 01.08.2024 முதல் கட்டண விகிதம் மாற்றப்பட்டுள்ளது என தெரிவித்து, புதிதாக Online-ல் விண்ணப்பிக்குமாறும், எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என கேட்டதற்கு ரூ.32,39,910/– கட்டணம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டதை மனுதாரர் ஏற்கவில்லை என்பதும், எனவே, மாநகராட்சியால் தெரிவித்த ரூ.9,40,081/–ஐ உடன் இன்றைய தேதியில் வட்டியுடன் செலுத்த சம்மதம் தெரிவித்து, கட்டிட அனுமதி (Building Licence) வழங்கிட கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் மனுதாரரின் தந்தையின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

புகார் மனுதாரர் கட்டிட அனுமதி கோரிய இணையதளம் சேவை எண்.138/CP/24-25/0008071-ல் விண்ணப்பம் செய்ததின் பேரில் 28.05.2024 இளநிலை உதவியாளர் தனது Login Id-ல் உரிய கட்டணங்கள் பதிவு செய்து ஆணையர் அனுமதிக்கு 26.06.2024 அனுப்பப்பட்டு அன்றைய ஆணையாளர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டது என்பதும், மீண்டும் இளநிலை உதவியாளர் 01.07.2024 அன்று மனுதாரர் உரிய கட்டணங்கள் செலுத்துவதற்கு ஏதுவாக தனது சேவை எண்ணில் பதிவு இறக்கம் செய்யும் வகையில் Print செய்துள்ளார் என்பதும், 01.07.2024 அன்று மனுதாரர் கட்டிட அனுமதிக்கு பதிவேற்றம் செய்யப்பட்ட சேவை இணைப்பில் அன்றைய தினமே பார்வையிடப்பட்டு அன்றைய நாளிலிருந்து 30 நாட்களுக்குள் உரிய கட்டணங்கள் செலுத்தலாம் எனவும், 30 நாட்களுக்குள் கட்டணங்கள் செலுத்தாவிடில் மேற்படி சேவை முடிவு பெற்று விடும் வகையில் இணையதளம் சேவை செயல்பாட்டில் இருந்தது என்பதும், இணையதளம் வாயிலாக கட்டிட அனுமதி வழங்க நடைமுறை உள்ளதால் உரிய கட்டணங்களை செலுத்த மாநகராட்சியால் அறிவிப்பு வழங்க வேண்டியதில்லை என்பதும், மற்றும் மனுதாரர் கூறுவது போல் 30.07.2024 நாளிட்ட கேட்பு அறிவிப்பு எதுவும் வழங்கப்படவில்லை என்பதும், 30.07.2024–க்குள் சேவை முடிவு பெற்று விடும் என தெரிவித்து உடனடியாக உரிய கட்டணம் செலுத்துமாறு மனுதாரருக்கு நேரில் அறிவுறுத்தப்பட்டது என்பதும், ஆனால் மனுதாரர் உரிய காலத்திற்குள் கட்டணங்கள் செலுத்தவில்லை என்பதும், கட்டிட அனுமதிக்கு Offline-ல் பணம் செலுத்த அனுமதி கோரிய விண்ணப்பம் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதும், கட்டிட அனுமதி வழங்கும் நடைமுறை இணையதளம் வாயிலாக வழங்கப்பட்டு வரும் நிலையில் Offline-ல் பணம் செலுத்த வழிவகை இல்லை என்பதும், மேலும் கட்டண விகிதங்கள் தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றம் தீர்மானம் மற்றும் அரசாணை எண்.72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் 05.02.2025–ன்படி மாற்றியமைக்கப்பட்டு இதர கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும் என்று நடைமுறையில் உள்ளது என்பதும், மனுதாரர் மீண்டும் ஒற்றை சாளர இணையம் (Single window portal) மூலம் விண்ணப்பித்து உள்ளூர் திட்டக்குழுமத்தில் திட்ட அனுமதி பெறப்படும் மனு நேரடியாக நகராட்சி நிர்வாக இயக்குநரகம் இணைய தளம் சேவை **tn.urban.eseva** மூலம் பெறப்பட்டு இணையதளம் வாயிலாகத்தான் கட்டிட அனுமதி வழங்க இயலும் என்பதும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் கட்டிட அனுமதி இணையதள சேவை எண் 138/CP/2024–2025/0008071–ற்கு ஒற்றை சாளர இணையம் (Single window portal) மூலம் விண்ணப்பித்து உள்ளூர் திட்டக்குழுமத்தில் திட்ட அனுமதி பெற்று மனுவினை நேரடியாக நகராட்சி நிர்வாக இயக்குநரக இணைய தளம் சேவை tn.urban.eseva மூலம் அளிக்கப்பட்டு

அதன் பின்னர் இணையதளம் வாயிலாகத்தான் கட்டிட அனுமதி வழங்க இயலும் என்றும், Offline-ல் பணம் செலுத்த வழிவகை இல்லை என்றும், கட்டண விகிதங்கள் தூத்துக்குடி மாநகராட்சி மாமன்ற தீர்மானம் மற்றும் அரசாணை எண்.72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 05.02.2025–ன்படி செலுத்தப்பட வேண்டும் என்ற தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கையினை ஏற்று மனுதாரரின் மனு தொடர்பான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைத்து இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) டாக்டர் கா. பாரதிகண்ணன்,
கதவு எண் 153–A, போல்பேட்டை மேற்கு,
தூத்துக்குடி–628 002.

(2) ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

(3) உதவி ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(5) இணை இயக்குநர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

14/11/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032